**செய்தி வெளியீடு எண்: 248** **நாள்: 02/04/2012**

## <u>அரசு பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்கள் (பின்னடைவு) காலியிடங்களுக்கு பரிந்துரை மற்றும் பதிவு மூப்பு விவரங்கள் அரசு இணையதளத்தில் அறியலாம்</u>

தமிழ்நாடு, ஆசிரியர் தேர்வு வாரியம், தலைவர் அவர்களிடமிருந்து 314 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 48 சிறுபான்மையின பட்டதாரி ஆசிரியர் பணிக்காலியிடங்களுக்கான காலியிட அறிவிக்கை பெறப்பட்டது. இப்பணிக் காலியிடங்களுக்கு மாநில அளவில் அமைந்த 15.03.2012 அன்றைய நிலவரப்படி தகுதியுள்ள வேலைவாப்பக பதிவுதாரர்களின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பரிந்துரைக்கப்பட்ட பதிவுதாரர்களின் பெயர் பட்டியல், பதிவு மூப்பு விவரங்கள், பாடவாரியாகவும், இனவாரியாகவும் (WWW.tn.gov.in) என்கிற தமிழக அரசின் இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி இணைய தளத்தில் மனுதாரர்கள் தங்களது பெயர் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பரிந்துரை பதிவு மூப்பு தேதிக்குள் தகுதியுள்ள மனுதாரர்கள் எவரும் விடுபட்டிருப்பின் அவர்கள் தாங்கள் பதிவு செய்துள்ள மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தினை உரிய ஆதாரத்துடன் <u>10.04.2012</u> தேதிக்குள் நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. <u>10.04.2012</u> தேதிக்குப் பின்னர் தொடர்பு கொள்ளும் மனுதாரர்களின் கோரிக்கை ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

**இயக்குநருக்காக.**

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**